மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, நாளை அது குறித்து அறிவிக்கப்படும்.

திரு. கா. கோ. கிருஷ்ணசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, சங்கராண்டான் பாளையத்தில் அமைக்கப்படும் குளிரூட்டும் நிலையத்தில் வேலை செய்யும் பணியாளர்களுக்கு, குடியிருப்பு வசதிகள் செய்துதரப்படுமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தக் குறிப்பு என்னிடத்திலே இல்லை. மாணபுமிகு உறுப்பினர் அவர்களுடைய உணர்வுகளின் அடிப் படையில் பரிசீலிக்கப்படும்.

சேலம் மாவட்டத்தில் மாட்டுத் தீவனம் தயாரிக்கும் தொழிற்சாலை.

*வினா எண். 534—செல்வி ப. விசயலட்சுமி : மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா:—

(அ) சேலம் மாவட்டத்தில் மாட்டுத் தீவனம் தயாரிக்கும் தொழிற்கூடம் அமைக்கும் செயற்குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் அது எங்கு, எப்போது ஆரம்பிக்கப் படும்?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : (அ) தற்பொழுது இல்லை.

(ஆ) எழவில்லை.

(முற்பகல் 9.10)

செல்வி ப. விசயலட்சுமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள் இல்லை என்று கூறினார்கள். மாண்புமிகு அமைச்சர வர்கள் இக்கேள்வியினைப் பரிசீலனை செய்தாவது மாட்டுத் தீவனம் தயாரிக்கும் தொழிற்கூடத்தை அமைக்க முன்வருவார் களா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. ஏற்கெனவே பெரியார் மாவட்டத்தில் ஈரோட்டில் ஒரு கால்நடைத் தீவனத் தொழிற்சாலையும் வட ஆற்காடு மாவட்டத்தில் ஆம்பூரில் ஒரு கால்நடைத்தீவன தொழிற்சாலையும் இயங்கிக் கொண்டிருக்கிறது. இரண்டாவது பால்பெருக்குத் திட்டத்தின் கீழ் மதுரையில் 81 இலட்சம் ரூபாய் செலவில் ஒரு கால்நடைத் தீவனத் தொழிற்சாலை அமைக்க அரசு திட்டமிட்டிருக்கின்றது. இது முடிந்த பிறகு தேவை என்றால் சேலத்தில் தொடங்கப்படும்.

1982 மார்ச் 18]

திரு. சேலம் மு. ஆறுமுகம் : தலைவரவர்களே, தமிழ்நாட்டில் எந்தெந்த இடங்களில் மாட்டுத் தீவனம் தயாரிக்கும் தொழிற் சாலைகள் உள்ளன. அவைகள் ஆண்டு ஒன்றுக்கு எத்தனை டன் மாட்டுத் தீவனம் தயாரிக்கின்றன. அதனால் அரசுத் துறைக்குக் கிடைக்கக்கூடிய வருமானம் எவ்வளவு?

மாண்புமிகு திரு. கே ஏ கிருஷ்ணசாமி : ஏற்கெனவே நான் பதிலளிக்கின்றபோது ஆம்பூரிலும், ஈரோட்டிலும் அந்தத் தொழிற்சாலைகள் இருப்பதாகச் சொல்லி இருக்கிறேன். மதுரையில் வர இருப்பதாகவும் சொல்லி இருக்கிறேன். ஈரோட்டிலே இருக்கின்ற அந்த ஆலையில் 100 டன் தயாரிக்கப் படுகின்றது. அதுபோல் ஆம்பூரிலும் தயாரிக்கப்படுகின்றது, இப்படி இரண்டு இடங்களில் தயாரிக்கப்பட்டு வருகின்றது.

திரு. கே. குப்புசாமி : தலைவரவர்களே, மதுரை மாவட்டத் திலே ஆரம்பிக்கப்பட இருக்கின்ற மாட்டுத் தீவனத் தொழிற் சாலையை மாடுகள் மற்றும் பிராணிகள் அதிகமாக வாழ்கின்ற ஒட்டன் சத்திரம் பகுதியிலே ஆரம்பிக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : தலைவரவர்களே, தொழிற்சாலை அமைக்க கொள்கை அளவில் முடிவு செய்யப் பட்டிருக்கிறது. எந்த இடம் என்பது மற்ற வசதிகளை எல்லாம் அனுசரித்துத்தான் முடிவு செய்யப்படும்.

திரு நா. சுந்தரராஜ் : தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இரண்டு இடங்களில் மாட்டுத் தீவனத் தொழிற்சாலை ஆரம்பிக்கப்பட இருப்பதாகச் சொன்னார்கள். தமிழ்நாட்டில் கோழி வளர்ப்பு அதிகமாக இருப்பதால் கோழித் தீவனம் தயாரிக்கும் திட்டம்பற்றி பரிசீலிக்கப்படுமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : தலைவரவர்களே, இதுபற்றி சம்பந்தப்பட்ட அமைச்சரிடத்திலே கேள்வி கேட்கு மாறு கேட்டுக்கொள்கிறேன்.

திரு. என். வரதராஜன் : தலைவரவர்களே, தமிழ்நாட்டிலே மூன்றிலே இரண்டு பகுதி நிலம் வானம் பார்த்த பூமியாகத்தான் இருக்கின்றது. அங்கெல்லாம் இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை தான் மழை பெய்கின்றது. ஆகவே அந்தப் பிரதேசங்களில் கால் நடை தீவனம் தட்டுப்பாடாக இருக்கின்றது. ஆகவே தமிழ் நாட்டிலே உபயோகப்படுத்துகின்ற பச்சைப்புல், வைக்கோல், சோளத்தட்டை போன்றவைகளை விட இந்த உற்பத்திச் செலவு கூடுகின்றதா? அப்படியானால் குறைந்த விலையிலே உற்பத்தி செய்து வறட்சிப் பிரதேசங்களுக்கு கொடுக்க விரிவான திட்டத்தைச் செயல்படுத்துவார்களா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : தலைவரவர்களே, இதுபற்றிய விவரங்கள் இல்லை. இது முக்கியமான விவரம் என்பதால் தனிக்கேள்வி போட்டால் விளக்கம் தரப்படும்.